# எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசு

*டிசம்பர் மாதமானது இயேசுவின் பிறப்பை உலகம் கொண்டாடுதலுக்கும், "கிறிஸ்துமஸ்" என்றழைக்கப்படும் நாளுக்கும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. நடக்கின்ற யாவற்றையும் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவதா அல்லது இதனை, போதிப்பதற்கான ஒரு தொடக்க இடமாக எடுத்துக் கொள்ளுவதா என்பது பற்றி உங்கள் சொந்த முடிவை நீங்கள் பயன்படுத்த வேண்டியிருக்கும். பின்பகுதியை (போதிப்பதற்கான ஒரு தொடக்க இடம் என்பதை) நீங்கள் முடிவு செய்தால், வேதாகம சத்தியத்திற்கானதாவும் பலகையாக (தொடக்க இடமாக) இருக்கும் வகையில் பரிசு அளித்தல் என்பதைப் பயன்படுத்தும் ஒரு பாடம் இங்குள்ளது.*

நம்மில் பெரும்பாலோர் பரிசுகளைப் பெறுவதற்கு விரும்புகின்றோம். பல ஆண்டுகளாக எனக்குப் பல பரிசுகள் கொடுக்கப்பட்டுள்ளன: சுவர்க் கடிகாரங்கள், ஹாட்பாக்ஸ் என்னும் டப்பாக்கள் மற்றும் பொருத்தமில்லாத உடைகள் முதலியன. பரிசுகளைப் பெறுவதென்பது வேடிக்கையானதாக உள்ளது; பரிசுகள் கொடுப்பதென்பது அதை விட மிகவும் வேடிக்கையானதாக உள்ளது. இயேசு இதை மிகச் சிறந்ததென்று கூறி இருக்கின்றார்: "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" (அப். 20:35). நாம் யாவரும் இந்தப் பாடத்தைக் கற்றுக் கொள்வதும், இதை நமது பிள்ளைகளுக்குக் கற்பித்தலும் அவசியமாய் இருக்கின்றது.

எனது சொந்தப் பரிசு கொடுத்தலில் ஒரு அம்சமானது சமீபத்திய ஆண்டுகளில் என்னைக் கவலைக்குள்ளாக்கியிருக்கின்றது. மலைப் பிரசங்கத்தில் இயேசு, "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறதென்ன? ..." (மத். 5:46, 47) என்று கூறினார். பிலிப்ஸ் மொழிபெயர்ப்பானது வசனம் 47ல், "நீங்கள் உங்கள் சொந்த வட்டாரத்திற்குள்ளேயே வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டால் ..'' என்று கூறுகின்றது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில், தேவனுடைய இரண்டு தீர்க்கதரிசிகள் கொலையுண்டு விழுந்த வேளையில், "... பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள்'' (வெளி. 11:10) என்று நாம் வாசிக்கின்றோம். எனது "பரிசு வழங்குதலில் பெரும்பான்மையானவை பரிசுப் பரிமாற்றமாகவே இருந்துள்ளது. நான் எனது பிள்ளைகளை மீண்டும் வளர்க்க முடியுமென்றால், நமக்குப் பதில்

*(பரிசு) கொடுக்க முடியாதவர்களுக்குப் பரிசுகள் கொடுத்தல் பற்றி அதிகம் வலியுறுத்த முயற்சி செய்வேன்.*

*பரிசுகளைப் பற்றி வேதாகமத்தில் அதிகமாய்க் கூறப்படுகின்றது: ஆபிரகாம் தமது மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கு நன்கொடைகளைக் கொடுத்தார் (ஆதி. 25:6). சாஸ்திரிகள் இயேசுவைக் கண்டபொழுது, "... பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப் போளத்தையும் அவருக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்கள்" (மத். 2:11). பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு "நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்துள்ளார்கள்" (மத். 7:11). இந்தக் கட்டுரையில்/பாடத்தில் நாம், "எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசை"ப் பற்றிப் பேசுவோம்.*

## மிகச் சிறந்த பரிசை ஒப்புக் கொள்ளுதல்

*எது எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? பையன்கள் பந்து, கிரிக்கெட் மட்டை போன்றவற்றை மிகச் சிறந்ததாக நினைக்கலாம். பெண் பிள்ளைகள், பொம்மைதான் மிகச் சிறந்த பரிசாய் இருக்கும் என்று ஒப்புக் கொள்ளலாம். தாய்மார்களைப் பொறுத்தமட்டில், யாரேனும் வந்து வீட்டைச் சுத்தப்படுத்தினால் அதுவே பெரிய பரிசாக இருக்கும். தந்தையர்களைப் பொறுத்தமட்டில், மற்ற ஒவ்வொருவரும் விரும்புகின்ற பரிசுகளுக்கான விலைமதிப்பைச் செலுத்தப் போதுமான பணமே பெரிய பரிசாய் இருக்கும்.*

*ஆண்டுகளினூடாக, ஆழ்ந்த திகைப்புக்குள்ளாக்கும் அன்பளிப்புகள் சில அளிக்கப்பட்டுள்ளன. நேபுகாத்நேச்சார் அரசன் - பழங்கால உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான - பாபிலோனின் தொங்கும் தோட்டத்தை உருவாக்கி, அதைத் தனது மணவாட்டிக்குப் பரிசளித்தான், (ஏனெனில்) அவள் தனது முன்னாள் இல்லம் குறித்து எண்ணித் தனிமையில் தவித்திருந்தாள். நெப்போலியன் தனது மனைவி ஜோசப்பைனுக்கு 880 வைரக் கற்கள் கொண்ட கிரீடம் ஒன்றைக் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. ஹோட்டல் செல்வந்தரான ஜார்ஜ் போல்டட் என்பவர் செயின்ட் லாரன்ஸ் நதியில் உள்ள ஆயிரக்கணக்கான தீவுகளில் ஒன்றை வாங்கி, அதை இதய வடிவில் செதுக்கித் தனது மனைவிக்குப் பரிசளித்தார்.[1]*

*நீங்கள் பெற்றுள்ளவைகளிலேயே மிகச் சிறந்த பரிசு எது? இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தல் என்பது என்னைப் பொறுத்த வரையில் மிகவும் கடினமாய் இருக்கும்; ஆனால் இதைக் கேட்கையில், ஒரு காட்சி என் சிந்தைக்கு வருகின்றது. எனக்குப் பத்து வயதும், என் தம்பி காய்(ரோப்பரு)க்குச் சுமார் ஏழு வயதும் ஆகியிருந்தது. நாங்கள் ஒரு வண்டி வாங்க வேண்டும் என்று அதிகம் விரும்பினோம், ஆனால் எனது தாயும் தந்தையும், "கஷ்டமான காலம்" பற்றிப் பேசினர்; எங்களிடம் அதிகம் பணம் இருந்ததில்லை. எனது சகோதரன் ஒரு வண்டியைப் பெற்றுக் கொள்வது குறித்து உற்சாகமாய் இருந்தான், அவனுடைய சிறு இருதயம் உடைந்து போவதை நான் விரும்பவில்லை. நாங்கள் ஏன் வண்டியைப் பெற மாட்டோம் என்பது பற்றி நான் அவனுக்குக் கவனத்துடன் எடுத்து*

விளக்கினேன். நான் திகைப்படையும்படியாக, நாங்கள் ஒரு வண்டியைப் பெற்றோம்! அது ஒரு நேர்த்தியான பரிசாய் இருந்தது.

எங்கள் வீடு முழுவதிலும், நானும் எனது மனைவியும் பல ஆண்டுகளாகப் பெற்ற பரிசுகள் உள்ளன. அவைகளை நாங்கள் நோக்கும் பொழுதெல்லாம், நாங்கள் நேசிக்கும் மக்களின் நினைவு எங்கள் சிந்தைகளில் பெருக்கெடுத்தோடுகின்றது. பல ஆண்டுகளாக நான் - எனது இளம் வயதில் இருந்தே முப்பது இன்ச்சுகள் அளவான இடுப்பை நான் கொண்டிராவிட்டாலும் - முப்பது இன்ச்சுகள் அளவான இடுப்பிற்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பெல்ட்டைப் பாதுகாத்து வருகின்றேன், ஏனெனில் அதை ஒரு ஆண்டில் என் பிறந்த நாளன்று எனது மகள்கள் எனக்குப் பரிசாக அளித்தார்கள்.

மக்கள் ஏதாவது சில வகையில் தங்களையே (பரிசுகள் மூலம்) கொடுத்தல் என்பதுதான் மிகவும் விலை உயர்ந்த பரிசாக உள்ளது. ஒரு தந்தை தனது மகனுக்குக் கொடுத்த துண்டுச் சீட்டு ஒன்றில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: "எனது மகனுக்கு: நீ விரும்பியபடி பயன்படுத்திக் கொள்வதற்காக நான் எனது வார நாட்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மணி நேரத்தையும், எனது ஞாயிற்றுக் கிழமைகளில் இரண்டு மணி நேரங்களையும் உனக்குத் தருகின்றேன். அன்புடன், அப்பா."

நாமும் மற்றவர்களும் பெற்றுள்ள அற்புதமான பரிசுகளைப் பற்றி நம்மில் பெரும்பாலோர் நினைக்க முடியும், ஆனால் நான், எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசாக உள்ளது தேவனிடத்திலிருந்து வந்துள்ளது என்று ஆலோசனை கூற விரும்புகின்றேன். இது நம்மைத் திகைப்படையச் செய்யக் கூடாது, ஏனென்றால் யாக்கோபு, "... பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது ..." (யாக். 1:17) என்று கூறினார்.

தேவன் நமக்கு இவ்வளவு அதிகமாய்க் கொடுக்கிறவராய் இருக்கிறார். "எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் ..." (அப். 17:25). இது நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்குகின்றது: "... ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது ..." (2 பேது. 1:3). இருப்பினும் தேவன் நமக்குக் கொடுத்துள்ள ஒரு விசேஷித்த பரிசு - ஒரு மிகவும் விசேஷித்த பரிசு - எனது சிந்தையில் உள்ளது.

நான் பிள்ளைகளுக்குப் போதிக்கும் பொழுது, சில வேளைகளில் கன சதுரவடிவத்தில் உள்ள ஒரு சிறு பெட்டியான "God's Gift Box" என்ற காட்சி உதவிப் பொருளைப் பயன்படுத்துவதுண்டு. God's Gift Box என்ற காட்சி உதவிப் பொருளானது பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது மற்றும் பிள்ளைகளுக்குப் போதிக்கும் பல புத்தகங்களில் இதைக் காண முடியும். இதை தொடங்கி வைத்தவர் யாரென்று நான் அறியாதிருக் கின்றேன். இணைத்துப் பிணைக்கும் நூல்களில் சில இதை ஒன்றாய் இணைத்துப் பற்றியுள்ளது. இதன் வெளிப்பக்கங்களில் "D," "O," "S," "G" மற்றும் "N" போன்ற சில எழுத்துக்கள் உள்ளன.

*நான் இந்தப் பெட்டியை இப்பக்கமும் அப்பக்கமுமாகத் திருப்பி, எழுத்துக்களைச் சுட்டிக் காண்பித்து, அந்தப் பரிசு என்னவாக இருக்கும் என்று யூகிக்கும்படி பிள்ளைகளிடம் கேட்பதுண்டு: "D" என்பது diamonds என்ற வைரங்களைக் குறிக்கின்றதா? "O" என்பது opals என்ற மாணிக்கக் கற்களைக் குறிக்கின்றதா? "S" என்பது silver என்ற வெள்ளியைக் குறிக்கின்றதா? "G" என்பது gold என்ற தங்கத்தைக் குறிக்கின்றதா? அவர்கள் அதைக்காட்டிலும் சிறந்த வகையில் அறிந்துள்ளார்கள். சிலர் தங்கள் சிந்தைகளில் இந்த எழுத்துக்களை மாற்றிப் போட்டு, என்னிடத்தில் இந்த எழுத்துக்கள் "GOD'S SON" என்ற தேவனுடைய குமாரனைக் குறிக்கின்றன என்று கூறுவதுண்டு.*

*நான் எந்த வசனத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றேன் என்று நீங்கள் ஒருவேளை ஏற்கனவே யூகித்திருக்கலாம் - யோவான் 3:16: "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." தேவன் முழு உலகத்தின் மீதும் அன்புகூர்ந்தார். பரிசின்பட்டியல் எவ்வளவாக உள்ளது! ஒரு ஆண்டுக் காலத்தில் நான் பரிசுகளை வாங்கித் தர விரும்பும் மக்களின்/நபர்களின் எண்ணிக்கையைப் பற்றிய நினைப்பினால் மேற்கொள்ளப்படுவதாகச் சில வேளைகளில் நான் நினைப்பதுண்டு - ஆனால் தேவனுடைய பரிசுப் பட்டியலுக்கு அடுத்ததாக வைக்கப்படும் பொழுது என்னுடைய பரிசுப் பட்டியல் ஒன்றுமற்றதாகின்றது. அவர் ஒவ்வொருவரையும் உள்ளடக்கியிருந்தார்!*

## *மிகச் சிறந்த பரிசை மதித்தல்*

### *மிகச் சிறந்த பரிசின் முதல் பாகம்*

*"எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசு" என்பது இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது. முதல் பாகம் இயேசுவாக உள்ளார்: தேவன் "தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார்." பரிசின் இந்தப் பகுதியானது ஒரு சிறு குழந்தையின் வடிவில் இவ்வுலகிற்கு வந்தது. மேய்ப்பர்களுக்குத் தூதன் கூறிய வார்த்தைகளை நினைவுகூருங்கள்: "பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக். 2:10, 11).*

*இந்தப் பிறப்பின் தனிச் சிறப்பு யோவான் 1:1, 14ல் காணப்படுகின்றது. "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது"; "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம் பண்ணினார்" தேவன் மாம்சத்தில் வந்தது திரு அவதாரம் என்று அழைக்கப்படுகின்றது. இந்தத் திரு அவதாரம் இல்லையென்றால், சிலுவையில் அறையப்படுதல் என்பது அர்த்தமற்றதாகி*

*விடும். கன்னியிடம் இருந்து பிறப்பு என்பதின்றி திரு அவதாரம் என்று எதுவும் இருக்க முடியாது (மத். 1:23). இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் அதே வேளையில் மக்கள், கன்னியிடமிருந்து அவர் பிறந்ததை மறுப்பது என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது.*

*இருப்பினும், இயேசுவின் பிறப்பு என்பது பரிசுப் பெட்டியில் உள்ள ''முதல் எட்டிப் பார்த்தலாக'' மட்டுமே இருந்தது. இயேசு, கீழான தாழ்மையான ஒரு இல்லத்தில் பிறந்து, வாழ்வின் (அத்தியாவசியத்) தேவைகளுக்குள்ளாக மட்டுமே வளர்ந்தார். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரிய முள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரிய வான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி. 8:9).*

*இது யாவும் இப்பரிசின் முழுமையான வெளிப்பாட்டிற்கு வழிநடத்தியது. பிலி. 2:6-8ல் பவுல் இந்தப் பரிசைப் பிரிக்கத் தொடர்ந்தார்:*

> *அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப் பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*

*தேவனுடைய பரிசுப் பெட்டியின் விவரிப்புக்கு நாம் திரும்புவோம்: அந்தப் பரிசு என்னவாக இருக்கும் என்பதைப் பிள்ளைகள் யூகித்த பிறகு, நான் அதன் நூல்களை அவிழ்ப்பதுண்டு. விரிக்கப்படுகையில் பெட்டி யானது ஒரு சிலுவை வடிவில் இருக்கும்.*

*தேவன் தம் குமாரனை இந்த உலகிற்கு அனுப்பினார் என்ற கருத்தில் மட்டும் அவரைக் "கொடுத்தது" இல்லை. மாறாக, அவரை ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக அவர் கொடுத்தார்: நமக்காக ஒரு சிலுவையில் அவர் மரிக்க வேண்டும்!*

*இயேசுவின் பலியானது ஒரு தியாகமாய் இருந்தது (மற்றும் இருக்கிறது) என்பதை வேத வசனங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன: மத். 20:28ம் வசனமானது, "மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்'' என்று வலியுறுத்துகின்றது. இயேசு கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்திய பொழுது, அவர் புளிப்பில்லாத அப்பத்தை எடுத்து, "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக். 22:19ஆ). கலா. 1:3, 4ல் பவுல், "... கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ... நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்" என்று எழுதினார். கலா. 2:20ல் பவுல் ''என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரன்" என்றெழுதும் பொழுது இன்னும் அதிகம் தனிப்பட்ட வகையில் குறிப்பிட்டார்.*

*இந்த ஆய்வுப் பொருளின்மீது பவுலின் எழுதுகோலில் இருந்து வந்த வசனப்பகுதிகள் ஏறக்குறைய முடிவற்றவைகளாய்த் தொடருகின்றன:*

> *கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தது போல ... (எபே. 5:2).*
>
> *தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே (1 தீமோ. 2:5, 6).*
>
> *... இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி ... அவர் ... நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் (தீத்து 2:13, 14).[2]*

*இந்தப் பரிசின் விலையை முற்றிலுமாய் மதிப்பது என்பது நமக்குக் கடினமானதாக உள்ளது. சிலுவையில் அறையப்படுதலை, ''மிகக் கொடூரமான மற்றும் மிகப் பயங்கரமான துன்புறுத்தல்'' என்று சிசரோ அழைத்தார். கிளாவ்ஸ்னர் என்பவர், "மனிதன் தன் சக மனிதன் மீது பழி தீர்த்துக் கொள்ளக் கண்டு பிடித்தவற்றிலேயே மிகப் பயங்கரமானதும் கொடூரமானதும் சிலுவையில் அறைதல் என்பதேயாகும்" என்று கூறினார்.[3] சிலுவையில் இயேசுவின் பாடுகளில் சிலவற்றை ஏசாயா 53:5 விவரிக் கின்றது: "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." பின்வரும் வார்த்தைகளை உங்கள் சிந்தையில் அடிக் கோடிட்டுக் கொள்ளுங்கள்: ''காயப்பட்டு,'' ''நொறுக்கப்பட்டு,'' ''ஆக்கினை,'' ''தழும்புகள்.'' காயங்கள் அடிப்படையில் ஐந்து வகைப்படுகின்றன என்று மருத்துவ அறிவியல் கூறுகின்றது.[4] இயேசு நமக்காக இந்த எல்லா வகைக் காயங்களையும் அனுபவித்தார்.*

*(1) அடிபட்ட காயம், மழுங்கலான ஒரு ஆயுதத்தினால் அடிப்பதன் காரணமாக ஏற்படுவது. மீகா 5:1ல் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தபடியாக இயேசு ஒரு கோலினால் தலையில் அடிக்கப்பட்டார்.*

*(2) கிழிபட்ட காயம், கிழிக்கும் கருவியொன்றினால் ஏற்படுவது. கொடூரம் செய்வதில் நிபுணனான ஒருவனின் கையில் உள்ள சாட்டையின் நுனியில் உள்ள கூர்மையான பொருட்கள் விவரிக்க இயலாத துன்பத்திற்குக் காரணமாக முடியும்.*

*(3) ஊடுருவும் காயம், கூரான முனையுள்ள ஆயுதத்தினால் ஏற்படுவது. இயேசுவுக்குச் சூட்டப்பட்ட முள்கிரீடத்தில் இருந்த முட்கள் குறைந்த பட்சம் நான்கு அங்குல நீளம் கொண்டதாய் இருந்திருக்கும். படைவீரர்கள் இந்த கிரீடத்தை அவர் தலையில் வைத்து அதன் மீது கோலினால் அடித்தார்கள் (மத். 27:29, 30), இது ஊடுருவும் காயங்கள் கொண்ட ஒரு வட்டத்தை ஏற்படுத்தியிருக்கும்.*

*(4) துளையிடும் காயம், துளைக்கும் கருவியொன்றினால் ஏற்படுவது. எலும்புகளுக்கு மத்தியில் செலுத்தப்பட்ட இரும்பு ஆணிகள் அவைகளை உடைக்காமல் பிரித்தன, இது கடும் வேதனை தரும் வலிக்குக் காரணமாக இருந்திருக்கும். "என் கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள்" (சங். 22:16).*

*(5) வெட்டப்பட்ட காயம், கூர்முனையுள்ள ஆயுதத்தினால் ஏற்படுவது. ''ஆகிலும் போர்ச் சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான், உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது" (யோவா. 19:34).*

*இயேசு அனுபவித்த, ஆவிக்குரிய பெருந்துயரையும் சேர்த்துக் காணும் பொழுது, இது கொடுக்கப்பட்டவற்றிலேயே மிகவும் விலையேறப் பெற்ற பரிசாக இருந்தது என்று நாம் முடிவு செய்கின்றோம். இது தானே முன் வந்து கொடுக்கப்பட்டது என்பது திகைப்புக்குரியதாக உள்ளது. இயேசு, "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் ... ஒருவனும் அதை என்னிடத் திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன் ..." (யோவா. 10:17, 18) என்று வலியுறுத்தினார்.*

*தேவன் கொடுத்துள்ள இரு பாகம் கொண்ட பரிசின் முதல் பகுதி இயேசுவே ஆவார் - அவர் நமக்காகச் சிலுவையில் மரித்தார்.*

*"தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக ஸ்தோத்திரம்" (2 கொரி. 9:15).*

## *மிகச் சிறந்த பரிசின் இரண்டாம் பாகம்*

*இயேசுவின் பலியினால் ஏற்பட்ட விளைவுதான் தேவனுடைய பரிசின் இரண்டாம் பாகமாக உள்ளது: சிலுவையின் மூலமாக வரக்கூடிய இரட்சிப்பு! "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே. 2:8). "பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23).*

*நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருத்தலின் சாத்தியக்கூறு பற்றி யாராவது ஒருவர் பேசுகின்ற பொழுது நமது பதில்செயல் என்னவாக உள்ளது? நாம் உணர்வெழுச்சியடைகின்றோமா அல்லது ஒரு கொட்டாவியை அடக்கிக் கொள்கின்றோமா? சில பதில் செயலை நான் கற்பனை செய்ய முடிகின்றது: "அதைப் பற்றி நான் நூற்றுக்கணக்கான முறைகள் கேள்விப்பட்டுள்ளேன்; அது பழைய செய்தியாக உள்ளது." உங்களைப் பொறுத்தமட்டில் இது உண்மையாய் இராது என்று நான் நம்புகின்றேன். உண்மையிலேயே இரட்சிப்பு என்பது எவ்வளவு மெய்சிலிர்க்கும் அனுபவம் என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். இதைப் புரிந்து கொண்ட மாற்கு என்னும் பையனைப் பற்றி ஜோ பர்னட் அவர்கள் பின்வருமாறு கூறினார்:*

> [விடுமுறை நாட்கள்] பற்றி நினைக்கும் பொழுது மாற்கு, பதிமூன்று ஆண்டுகளுக்கு முன்பு தான் நான்கு வயதானவனாய் இருந்த

பொழுது எதுபோல் இருந்தது என்பதை நினைவு கூர்கின்றான் ...

அது அவனுடைய பெற்றோர்கள் மதுபானத்தைக் கண்டுபிடிக்கும் முன்பு நடைபெற்றது:

... அது போதையின் கலவரம், நீண்ட காலக் கைவிடுதல்கள், வேலையின்மை ஆகியவற்றிற்கு முன்னானது;

அது, விவாகரத்து மாற்குவை அவன் தகப்பனிடமிருந்து இரண்டாயிரம் மைல்கள் தூரம் பிரிப்பதற்கு முன்னதாகவும் மற்றும் ஒரு வாகன விபத்தானது அவனது தாயாரை அவனிடமிருந்து என்றென்றுமாக பிரிப்பதற்கும் முன்னதாகவும் இருந்தது;

... அது அவன், ஒரு சீர்திருத்தப் பள்ளியில் [விடுமுறை நாட்களைக்] கழிப்பது எவ்விதம் என்று அறியும் முன்னால் இருந்தது;

... அது அவன், ஒரு குழுவாக மரிஜுவானாவின் புகையினைச் சில முறைகள் இழுத்தால், அவனுக்கும் அவன் வாழும் உலகிற்கும் இடையில் இடைவெளி தூரம் ஏற்படும் என்பதை அவன் கண்டு பிடிக்கும் முன்பு இருந்தது;

... அது அவன் கைதாவதற்கு முன்பிருந்தது.

கடந்த ஆண்டில் மாற்கு விடுதலை செய்யப்பட்டான் மற்றும் ஒரு வளர்ப்பு இல்லத்தில் வைக்கப்பட்டான். இது வருத்தத்திலிருந்து அவன் மேலேறுதலின் முதல் படிவைப்பாக இருந்தது. அவனது வளர்ப்புப் பெற்றோர் கிறிஸ்தவர்களாய் இருந்தார்கள். உண்மையில் அன்புகூரப்படுதல் மற்றும் உண்மையில் பராமரிக்கப்படுதல் என்றால் என்ன என்பதை மாற்கு மீண்டும் கண்டறியத் தொடங்கினான்.

அவன் தனது புதுப் பெற்றோர்களுடன் தயக்கத்துடன் ஆராதிக்கச் சென்றான் ...

அவன் தன் வயதேயான மற்ற மக்களை அங்கே கண்டான். அவர்கள் அவனை ஏற்றுக் கொண்டனர். அவனை உள்ளடக்கினர். அவனுடன் பகிர்ந்து கொண்டனர். அவனுக்குப் போதித்தனர்.

கடைசியில், தனது கடந்த காலம் என்றென்றைக்குமாகத் துடைத்துப் போடப்பட முடியும் என்று நம்பிக்கையூட்டப்பட்ட நிலையில் அவன் தன் வாழ்வை இயேசுவுக்கு ஒப்புவித்தான். அது நடந்து ஆறு மாதங்கள் ஆகி விட்டது. கடந்த காலம் என்பது இன்னமும் வேதனையுள்ளதாகவே இருந்தது, ஆனால் மாற்றம் என்பது நம்புதற்கு அரியதாக இருந்தது ...

இந்த விடுமுறை நாள் மகிழ்வானதாயிருக்கும். அவனுடைய வளர்ப்புப் பெற்றோர்கள் அவன் மீது அமளி செய்வார்கள். அவன் நீண்ட காலமாகப் பெறத் தவறியிருந்த அன்பையும் கவனிப்பையும் அவனுக்குத்தர அவர்கள் முயற்சி செய்து கொண்டுள்ளார்கள்.

ஆனால் விடுமுறை நாட்களுக்கென்று அவன் வேறு திட்டங்கள் வைத்திருக்கின்றான். அவர்கள் அனுமதித்தால் அவன் சீர்திருத்தப் பள்ளிக்கு மீண்டும் செல்வான். அவன், "சகதியில் இருந்து மேலேறி இயேசுவுடன் நடப்பது எப்படி என்பதை நான் அந்தப் பையன் களிடம் கூற விரும்புகின்றேன். தனிமையில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ள அந்தச் சிறுவர்களிடத்தில், அவர்கள் முன்பாக நின்று, நான் அறிந்துள்ள மிக முக்கியமான வசனத்தைக் கூற விரும்பு கின்றேன்: "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை

*அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3:16).*[5]

இயேசுவும் அவர் அளிக்கின்ற இரட்சிப்புமே "எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசாக" உள்ளன என்று நான் நம்புகின்றேன், மற்றும் நீங்களும் அப்படியே விசுவாசிப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். இந்த ஆண்டில் உங்களுக்கு அன்பளிப்புகள் கிடைக்கலாம் அல்லது கிடைக்காமல் போகலாம், ஆனால் நீங்கள் பெறுகின்ற எந்த அன்பளிப்பும், தேவன் உங்களுக்கு ஏற்கனவே அளித்துள்ள பரிசுடன் ஒப்பிடப்பட முடியாது!

## பரிசை ஏற்றுக் கொள்ளுதல்

தேவனுடைய பரிசை ஏற்றுக் கொள்ளுதல் பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் கூற வேண்டும். பவுல், "தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு, உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்" (2 கொரி. 6:1) என்று எழுதினார். தேவனுடைய கிருபையான பரிசை ''ஏற்றுக் கொள்வது/பெற்றுக் கொள்வது'' அவசியமாகும் என்பதை இவ்வசனம் நிலைநாட்டுகின்றது. மேலும் இது, ஒருமுறை அதை நீங்கள் பெற்றுக் கொண்டால், அதை இழந்து போக(வும்) முடியும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. இவை யாவும் தேவனுடைய பரிசுகளைப் பொறுத்தமட்டில் (நமது) தனிப்பட்ட பொறுப்புக்களை வலியுறுத்துகின்றன.

தனிப்பட்ட பொறுப்பு என்ற கருத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளுவதில்லை. இரட்சிப்பு என்பது ஒரு பரிசாக இருப்பதினால், இது நம் பகுதியில் எந்த முயற்சியும் செய்யும் தேவையை நீக்கிப் போடுகின்றது என்று நினைக்கின்றார்கள். தேவனுடைய கிருபையை நீங்களும் நானும் சம்பாதித்துக் கொள்ள முடியாது என்பதை நிச்சயமாகவே நானும் ஒப்புக் கொள்கின்றேன், ஆனால் நாம் இன்னமும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் - மற்றும் அதற்கு, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் தேவைப் படுகின்றது.

''அன்புடன் சத்தியம்'' என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிக்குச் செய்தியாளனாக நான் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில், எனது சகோதரர் காய் (ரோப்பர்) நிகழ்ச்சியில் தோன்றி தேவனுடைய கிருபை பற்றிப் பேசினார். அவர் அதைப் பற்றி பேசுகையில், தனக்கு எங்களின் தாய் கொடுத்திருந்த ஒரு சட்டை உடை பற்றிக் கூறினார். அந்தப் பரிசின் பயனை அடைவதற்கு மேற்கொள்ள வேண்டியிருந்த படிகள் பற்றி அவர் விவரித்தார். முதலாவது அவர் அதை உறை நீக்க வேண்டும். பின்பு அவர் அதில் குத்தியுள்ள ஊசிகள் எல்லாவற்றையும் எடுத்து விட்டு, அந்தச் சட்டையை பொதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட அட்டைத் துண்டுகளையும் பிளாஸ்டிக் துண்டையும் எடுத்துப் போட வேண்டும். கடைசியாக, அவர் அந்தச் சட்டையை அணிய வேண்டும். காய், அந்தப் பரிசைத் தான் பயன்படுத்தும் முன்பாக, பதிமூன்று மாறுபட்ட செயல்களைச் செய்ய வேண்டும் என்பதாகக் கணக்கிட்டுள்ளார். அவர், "நான் என் தாயிடம்,

'அம்மா இதை நான் பயன்படுத்து முன்பு பதிமுன்று வகையான செயல்களைச் செய்ய வேண்டியுள்ளது, எனவே இது பரிசே அல்ல' என்று கூறியிருப்பேனா?'' என்று கேட்டார். அவரே பிறகு, ''இல்லை. அது இன்னமும் பரிசாகவே இருந்தது. அந்தப் பரிசைப் பயன்படுத்திக் கொள்ள அவசியமானவற்றை மட்டுமே நான் செய்தேன்'' என்று கூறினார். இதே வழி முறையில் தான், நீங்களும் நானும் செய்யும்படி தேவன் கூறியுள்ளவற்றைச் செய்த பிறகும் கூட இரட்சிப்பு என்பது இன்னமும் ஒரு பரிசாகவே உள்ளது. நாம் தேவனுடைய அந்த அற்புதப் பரிசை பெற்று, ஏற்றுக் கொண்டு பயன்படுத்துகின்றோம், அவ்வளவே.

எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசை நாம் எவ்விதம் ஏற்றுக் கொள்ளுகின்றோம்? நீங்களும் நானும் நமது சொந்த வகையில் இதைக் கணக்கிட முடியாதவர்களாய் இருக்கின்றோம்; கர்த்தர் மட்டுமே இதை நமக்குக் கூற முடியும். தேவனுடைய சிந்தனைகள் நமது சிந்தனைகள் அல்ல; அவருடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல (ஏசா. 55:8, 9). "எவ்விதம்?" என்ற கேள்விக்கான பதிலைக் கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ளார்.

அப். 2ல் பேதுரு இயேசுவைப் பற்றிப் பிரசங்கித்தார். அவர், "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள்" (வ. 36) என்று கூறினார். அவர் கூறியதைக் கேட்டவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' (வ. 37) என்று கதறினார்கள். பேதுரு அவர்களிடம், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (வ. 38) என்று கூறினார். மீண்டும், அப். 22ல், குற்றம் உணர்த்தப்பட்ட ஒரு விசுவாசியினிடத்தில், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (வ. 16) என்று கூறப்பட்டது.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, நமது பாவங்களுக்கு மனந்திரும்பி, (தண்ணீரில் முழுக்காட்டப்படுதல் என்ற) ஞானஸ்நானம் பெற வேண்டியது அவசியமாகும். ஒரு குறிப்பிட்ட சில நிபந்தனைகளை நிறைவேற்றுதலைப் பற்றி மட்டும் நான் கூறிக் கொண்டிருப்பதில்லை. நம்மையே நாம் ஒப்புவிப்பது பற்றி நான் பேசிக் கொண்டிருக்கின்றேன்; வாழ் நாள் முழுவதும் ஒரு உறுதிப்பாடு ஏற்படுத்திக் கொள்ளுதல் பற்றி நான் பேசிக் கொண்டிருக்கின்றேன்.

தேவன் உறுதிப்பாட்டை விரும்புகின்றார். ஏழை விதவையின் காணிக்கையை இயேசு பாராட்டினார். அவர், ''இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள்" (மாற். 12:44) என்று கூறினார். மக்கெதோனியர்களும் இதே வகையான உறுதிப்பாட்டினைக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பற்றி பவுல், "... முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கு ... ஒப்புக் கொடுத்தார்கள்" (2 கொரி. 8:5) என்று எழுதினார்.

*கர்த்தருக்கென்று உங்களையே கொடுங்கள், மற்றும் உங்கள் வாழ்வின் முன்னுரிமைகள் உங்களிடத்தில் இருக்கும். நீங்கள் உங்கள் நேரம், உங்கள் பணம், உங்கள் சக்தி, மற்றும் உங்கள் திறமைகள் ஆகியவற்றைக் கொண்டு என்ன செய்வது என்பதை அறிவீர்கள்.*

## *முடிவுரை*

*இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில், "இலவசமாய்ப் பெற்றீர்கள்; இலவசமாய்க் கொடுங்கள்" (மத். 10:8ஆ) என்று கூறினார். தேவன், எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பரிசை இலவசமாய் உங்களுக்குக் கொடுத்தார். நீங்கள் உங்கள் வாழ்வை சுயாதீனமாய் அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.*

---

*குறிப்புகள்*

[1]*(இம்மூன்று விவரிப்புகளும் ஜோ* R. *பர்னெட் அவர்களின்* "The Ultimate Gift" *என்ற கைப்பிரதியிலிருந்து* [Lubbock, Tex.: Pathway Publishing House, 1979] *எடுக்கப்பட்டவையாகும்.)* [2]*புதிய ஏற்பாட்டில் தேவன் நமக்கு கிறிஸ்துவின் பிறப்பை ஆண்டுதோறும் கொண்டாடும்படி கூறவில்லை, ஆனால் ஒவ்வொரு வாரந்தோறும் இயேசுவின் மரணத்தை நினைவுகூரும்படி அறிவுறுத்தியுள்ளார் என்பதைக் குறிப்பிட நீங்கள் விரும்பலாம். 1 கொரிந்தியர் 11:23-26 வசனப் பகுதியானது கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்திய விதம் பற்றி நமக்குக் கூறுகின்றது. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் கீழ், தொடக்க கால சபையானது ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி வந்தது (1 கொரி. 16:1, 2), மற்றும் அவர்கள் கூடிவந்த பொழுது அவர் களுடைய ஆராதனையானது கர்த்தருடைய பந்தியை மையம் கொண்டிருந்தது (அப். 20:7). அவர்கள் ஆண்டிற்கொரு முறையல்ல ஆனால் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றனர்!* [3]Quoted in Joe R. Barnett, "The Ultimate Gift," Upreach (Nov./Dec. 1982): 21. [4]Ibid., 20. *ஐந்து வகையான காயங்கள் பற்றிய தகவலானது அவர்களின் எழுத்தாக்கத்தில் இருந்து எடுத்தாளப்படுகின்றது.* [5]Ibid., 13, 20.